மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியான 7.5 சதவிகிதத்திற்கு நடைமுறை மூலதனக் கடன் பெறுகின்றன. அதனால் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ஏற்படும் இழப்பினை (சேவைத் தொகை) ஈடு செய்யும் பொருட்டு தமிழக அரசு 3 சதவிகிதம் மானியமாக மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கி வருகிறது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைமரி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற, ஈடு செய்கிற வட்டித் தொகையைக் கணக்கிடுகிற போது சில கூட்டுறவுச் சங்கங்கள் தவறான வழியில் பதிவு செய்து, தவறான கணக்குகள் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அப்படிப்பட்ட சங்கங்களை ஆய்வு செய்து தடை செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைமரி சங்கங்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்திலேதான், வங்கிகள் 10 சதவீதத்திலே கடன் கொடுக்கிறபோது, அரசு மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 7.5 சதவீதத்தில் கடன் கொடுத்து, அதனால் வங்கிகளுக்கு ஏற்படுகிற இழப்பை ஈடு செய்ய 3 சதவீதம் வட்டியை மானியமாகக் கொடுத்து நெசவாளர்களுக்கு உதவி வருகிறது. பிரைமரி கூட்டுறவுச் சங்கங்கள் தவறு செய்வதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவல் தெரிந்து குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

ஆற்காடு, திமிரி ஒன்றியங்களில் சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடம் கட்டுதல்.

75—(*வினா எண். 9337) திரு. த. பழனி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு திமிரி ஒன்றியங்களில் எத்தனை இடங்களில் சத்துணவுக் கூடங்களுக்கு இந்த ஆண்டு கட்டிடம் கட்டப்படும்?

(ஆ) எத்தனை சத்துணவுக் கூடங்களில் திருக்குறள் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கிறார்கள்?

(இ) அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆற்காடு ஒன்றியத்தில் 3 இடங்களிலும், திமிரி ஒன்றியத்தில் 4 இடங்களிலும் இந்த ஆண்டு சத்துணவுக் கூடங்களுக்குக் கட்டிடம் கட்டித் தரப்படும்.

1987 மார்ச் 5]

(ஆ) மற்றும் (இ): திருக்குறள் ஆசிரியர்கள் என்று அமைப்பாளர்களே தான் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் திருக்குறள் கற்றவர்களா என்பதை. அவர்களைத் தேர்ந்தெடுக்கும்போதே பார்வையிட்டு, அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள் கட்டவேண்டிய டெபாசிட் தொகை.

76—(*வினா எண். 11583)—திரு. கு. ரமணி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள் ஒவ்வொருவரும் ரூ. 600 டிபாசிட் கட்டவேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சத்துணவு அமைப்பாளர்கள் பொறுப்பில் மையங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ளதாகும். காய்கறி, விறகு, மற்றும் தானியப் பொருட்கள் வாங்க ஒரு குழந்தைக்கு 13 காசு வீதம் முன்பணம் வழங்கப்படுகிறது. எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் சத்துணவு அமைப்பாளர்கள் பல ஆயிரம் ரூபாய்கள் மதிப்புள்ள பொருட்களையும் கணிசமான அளவிற்கு பணத்தையும் கையாளுவதால் அவர்களிடமிருந்து ஒரு பொருத்தமான தொகையைப் பிணை வைப்புத்தொகையாகப் பெறுவது அவசியமென கருதப்பட்டு, இதனால் அரசின் நலன் நன்கு பாதுகாக்கப்படும், மேலும், இது சத்துணவுப் பணியாளர்கள் தங்கள் பணிகளைப் பொறுப்புடன் கவனிக்கச் செய்யும் என கருதப்பட்டது. எனவே, சத்துணவு அமைப்பாளர்களிடமிருந்து ரூ. 600 பிணை வைப்புத்தொகையாகப் பெற ஆணையிடப்பட்டது. பிறகு ஒரே தடவையில் ரூ. 600 கட்டுவது சிரமம், தவணை முறையில் கட்ட அனுமதிக்க வேண்டும் என்று சத்துணவு அமைப்பாளர்கள் சங்கங்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் பிணை வைப்புத் தொகையை மூன்று தவணைகளில் செலுத்த அனுமதி வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஆணையை எதிர்த்து சத்துணவு அமைப்பாளர்கள் சங்கம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளது. உயர்நீதிமன்றத்தின் இடைக்கால தடைக்கிணங்க தற்போது அவர்களிடமிருந்து பிணை வைப்புத் தொகை வசூலிப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.